# ஆண்டவர் எனது நல்லாயன்

ஆண்டவர் எனது நல்லாயன்
ஆகவே எனக்கொரு குறையுமிராது
ஆண்டவர் எனது நல்லாயன்
நீண்ட பசும்புல் தரை சேர்ப்பார்
குளிர் நீர் நிலைக்கெனை
அவர் நடத்தி செல்வார்

ஆண்டவர் எனது நல்லாயன்
ஆகவே எனக்கொரு குறையுமிராது
ஆண்டவர் எனது நல்லாயன்

ஆன்ம வாழ்விற்கு உயிர் தந்திடுவார் } (2)
அறநெறி தனிலே ஒழுக செய்வார்
காரிருள் சூழும் பள்ளத்தாக்கில்
நடக்க நேர்ந்தாலும் பயமே இல்லை
ஏனெனில் என்னுடன் நீர் இருக்கின்றீர்
எனை நின் கோலும் கழியும் தேற்றும்

ஆண்டவர் எனது நல்லாயன்
ஆகவே எனக்கொரு குறையுமிராது
ஆண்டவர் எனது நல்லாயன்

என் பகையாளர் முன் எனக்காக } (2)
இனிய நல் விருந்தை ஒழுங்கு செய்தீர்
என் தலைமீது எண்ணெய் பூசி
எனை அபிஷேகம் செய்தே வைத்தீர்
என்னே எனது பாத்திரம் நிரம்பி
எத்துணை இன்பம் வழியுது பொங்கி

ஆண்டவர் எனது நல்லாயன்
ஆகவே எனக்கொரு குறையுமிராது
ஆண்டவர் எனது நல்லாயன்

என் புவி வாழ்வின் ஒவ்வொரு நாளும்
எனை பின் தொடரும் உன் பேரன்பு
என்றும் ஆண்டவர் வீட்டினில் உறைவேன்
ஆண்டவர் எனது நல்லாயன்
ஆகவே எனக்கொரு குறையுமிராது
ஆண்டவர் எனது நல்லாயன்